தினமணி

# விதை நெல்லுக்கு நல்ல விலை தேவை

First Published : 19 Aug 2011 03:17:03 AM IST



*விவசாயிகள் உற்பத்தி செய்யும் விதை நெல்லுக்கு அரசு வழங்கும் விலை, மானியம் உள்பட ரூ. 16 தான். ஆனால் தனியாரிடம் கொள்முதல் செய்யும் விலையோ ரூ. 23.*

கடலூர், ஆக. 18: விதைநெல் தேவை அனைத்தையும், அரசு விதைநெல் பதப்படுத்தும் நிலையங்களே பூர்த்தி செய்ய வேண்டும் என்றும், விதைநெல் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு, நல்ல விலை கிடைக்க வேண்டும் என்றும் விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

தமிழ்நாட்டில் 8 லட்சம் ஏக்கரில் குறுவை நெல்லும், 39.5 லட்சம் ஏக்கரில் சம்பா நெல்லும் சாகுபடி செய்யப்படுகிறது. கடலூர் மாவட்டத்தில் 2.5 லட்சம் ஏக்கரில் சம்பா நெல் சாகுபடி செய்யப்படுகிறது. விவசாயிகளின் மொத்த விதைநெல் தேவையில் 17 சதவீதத்தை அரசு வழங்க வேண்டும் என்பது, அரசின் கொள்கை முடிவு.

நெல்லுக்கு நியாயமான விலை கிடைப்பது இல்லை. விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் நாளுக்கு நாள் நலிந்து வருகிறது. இந்த நிலையில் அறுவடை காலங்களில் நெல் அடிமாட்டு விலைக்குச் சென்றுவிடுவதால், விதை நெல்லை சேமித்து வைக்கும் மனநிலையில் பெரும்பாலான விவசாயிகள் இல்லை. எனவே அரசு வழங்கும் 17 சதவீதம் மட்டுமல்ல, தேவைப்படும் முழு அளவு விதை நெல்லையும் அரசு வழங்க வேண்டும் என்பதே, விவசாயிகளின் எதிர்பார்ப்பு.

ஆனால் அரசின் பங்கான 17 சதவீத விதைநெல்லைக் கூட, தமிழகத்தில் 65 இடங்களில் உள்ள அரசு விதை பதப்படுத்தும் நிலையங்கள் பூர்த்தி செய்யவில்லை என்கிறார்கள் விவசாயிகள். கடலூர் மாவட்டத்தில் வண்ட்ராயன்பட்டு, மிராளூர் ஆகிய இரு இடங்களில், அரசு விதைநெல் பதப்படுத்தும் நிலையங்கள் உள்ளன. இவற்றின் ஆண்டு உற்பத்தித் திறன் சுமார் 1,000 டன். ஆனால் கடந்த சில ஆண்டுகளில், மின்வெட்டு உள்ளிட்ட பிரச்னைகளால் சுமார் 700 டன்கள் மட்டுமே தயாரித்து உள்ளன.

கடலூர் மாவட்டத்தில் 2.5 லட்சம் ஏக்கர் சம்பா பரப்பளவில், சுமார் 1 லட்சம் ஏக்கரில் திருந்திய நெல் சாகுபடியும், 1.5 லட்சம் ஏக்கரில் வழக்கமான முறை சாகுடியும் இருக்கும் என, வேளாண் துறை தெரிவிக்கிறது. திருந்திய நெல் சாகுபடிக்கு ஏக்கருக்கு 10 கிலோவும், வழக்கமான முறை சாகுபடிக்கு ஏக்கருக்கு 30 முதல் 50 கிலோவும் விதைநெல் தேவைப்படும் என்றும், கடலூர் மாவட்டத்தின் மொத்த சம்பா விதைநெல் தேவை சுமார் 5,500 டன்னாக இருக்கும் என்றும் வேளாண் அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள். இதில் 17 சதவீதத்தை அரசு சார்பில் வழங்குவதற்காக, 1,100 டன் விதை நெல்லை விவசாயிகளுக்கு வழங்க, கடலூர் மாவட்ட வேளாண்துறை தயார் நிலையில் உள்ளது.

ஆனால் இந்த விதை நெல் முழுவதும் அரசு விதைநெல் பதப்படுத்தும் நிலையங்களில் இருந்து பெறப்படுவது இல்லை. கோவை, துடியலூர் உள்ளிட்ட பல இடங்களில் இருந்தும், வெளி மாநிலங்களில் இருந்தும், தனியாரிடம் இருந்தும் வேளாண்துறை கிலோவுக்கு ரூ. 23 வரை விலையில் கொள்முதல் செய்து, மானிய விலையில் (கிலோ ரூ. 15-66 முதல், ரூ. 18-60 வரை) விவசாயிகளுக்கு வழங்குகிறது.

இதனால் விவசாயிகள் தங்களது பெரும்பாலான விதைத் தேவைக்கு, தனியாரையே நம்பி உள்ளனர். தனியார் நிறுவனங்களில் விதை நெல் விலை, கிலோவுக்கு பிபிடி ரகம் ரூ. 30, பொன்னி ரூ. 26, ஏனைய சன்ன ரகங்கள் ரூ. 22 ஆக உள்ளன. "விதை நெல்லை உற்பத்தி செய்ய, விவசாயிகள் ஊக்குவிக்கப்பட்டால், விவசாயிகளின் பெரும்பான்மை விதைத் தேவையையும் அரசே பூர்த்தி செய்ய முடியும். வேளாண் துறை தனியாரிடம் வாங்கி விநியோகிக்கும் விதை நெல், பல நேரங்களில் தரமற்றதாக உள்ளது' என்கிறார், கடலூர் மாவட்ட உழவர் மன்றங்கள் கூட்டமைப்பின் தலைவர் பி. ரவீந்திரன்.

விவசாயிகள் உற்பத்தி செய்யும் விதை நெல்லுக்கு அரசு வழங்கும் விலை, மாநியம் உள்பட ரூ. 16 தான். ஆனால் தனியாரிடம் கொள்முதல் செய்யும் விலையோ ரூ. 23. விவசாயிகளுக்கு விதைநெல் உற்பத்திச் செலவைக் கணக்கிட்டு விலை நிர்ணயம் செய்யாமல், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வியாபாரிகள் கொள்முதல் செய்யும் விலையைக் கணக்கில் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது. விலை கட்டுபடியாகாததால் விதைநெல் உற்பத்தி செய்ய விவசாயிகள் பலர் முன்வருவது இல்லை என்றும் ரவீந்திரன் தெரிவித்தார்.

இதுகுறித்து வேளாண் துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், அரசு விதைநெல் பதப்படுத்தும் நிலையங்களின் உற்பத்தித் திறனை அதிகரித்து, விதை நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கச் செய்தால் மட்டுமே, பெரும்பாலான விவசாயிகளின் விதைநெல் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். அதன் மூலம் நெல் உற்பத்தியை அதிகரிக்க முடியும் என்றார்.

---

## திருத்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தில் அதிக மகசூலுக்கான வழிமுறைகள்

First Published : 18 Aug 2011 11:50:47 AM IST

சங்ககிரி, ஆக. 17: திருத்திய நெல் சாகுபடியில் உரிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அதிக மகசூல் பெறலாம் என்று சங்ககிரி வேளாண் உதவி இயக்குநர் என்.மாணிக்கம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியுள்ளதாவது:

நடவு வயலை துல்லியமாக சமன் செய்து, தரமான சான்று பெற்ற உயர் விளைச்சல் ரகங்களைப் பயன்படுத்த வேண்டும். 14 நாள்கள் ஆன நாற்றுகளை நடவு செய்ய வேண்டும். 3 கிலோ விதைகளைக் கொண்டு ஒரு ஏக்கரில் நடவு செய்யலாம். ஒரு ஏக்கர் நடவு செய்ய 40 ச.மீ. நாற்றங்கால் தேவை.

நாற்றங்காலின் மீது பாலித்தீன் விரிப்புகளை பரப்பி மரச்சட்டங்களை வைத்து மேட்டுப் பாத்திகள் அமைக்க வேண்டும். அதில் மண் மற்றும் தொழு உரத்தினை நிரப்பி விதைக்க வேண்டும். 25 செ.மீ. இடைவெளி

விட்டு நடவு செய்ய வேண்டும். வயலில் நீர் மறைய நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். 2.5 செ.மீ.க்கு அதிகமாக நீரை வயலில் நிறுத்தக் கூடாது.

நடவு செய்த 10-ம் நாள் முதல் 10 நாள்களுக்கு கோனோவீடர் கருவி மூலம் களையெடுக்க வேண்டும். இலை வண்ண அட்டையைப் பயன்படுத்தி தேவையான தழைச்சத்தினை மேல் உரமாக இட வேண்டும்.

உயர் விளைச்சல் நெல் ரகங்கள் மற்றும் வெள்ளை பொன்னி ஆகியவற்றை சங்ககிரி மற்றும் தேவூர் துணை வேளாண் விரிவாக்க மையத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

---

தினமலர்

## இலவச மாடு, ஆடு வழங்கும் திட்டம் :4 கிராம ஊராட்சிகள் தேர்வு

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 19,2011,02:48 IST

திருவள்ளூர்:தமிழக அரசின் இலவச கறவை மாடு, ஆடு வழங்கும் திட்டத்தை செயல்படுத்த திருவள்ளூர் மாவட்டத்தில், நான்கு கிராம ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.தற்போது பதவியேற்றுள்ள அ.தி.மு.க., அரசு தேர்தலின் போது, ஆட்சிக்கு வந்தால் கிராமப்புறத்திலுள்ள ஏழை மக்களுக்கு இலவச கறவை மாடும், ஆடும் வழங்கப்படும் என வாக்குறுதி அளித்தது.

இதன்படி, வரும் செப்., 15ம் தேதி, முன்னாள் முதல்வர் அண்ணாதுரை பிறந்த நாளன்று இத்திட்டம் முறைப்படி தொடங்கி வைக்கப்படுகிறது.இதுகுறித்து, கால்நடை பராமரிப்புத் துறை உயர் அதிகாரி ஒருவர் கூறியதாவது:

இலவச கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தை செயல்படுத்த கும்மிடிப்பூண்டி தாலுகாவில் உள்ள புதுப்பாளையம், நரசிங்கபுரம் ஆகிய

இரு கிராம ஊராட்சிகளும், வெள்ளாடு மற்றும் செம்மறியாடு வழங்கும் திட்டத்தை செயல்படுத்த ஆர்.கே.பேட்டை தாலுகாவுக்குட்பட்ட ஆதிவராகபுரம் கிராம ஊராட்சி மற்றும் எல்லாபுரம் தாலுகாவுக்குட்பட்ட ஏனம்பாக்கம் கிராம ஊராட்சி ஆகியவை தேர்வு செய்யப்பட்டுள்ளன.

பெண்களுக்கு முன்னுரிமை: பெண் பயனாளிகள் தான் இந்த இரு திட்டங்களையும் பெற தகுதியானவர்கள். கணவனை இழந்த பெண்கள், விவகாரத்து பெற்ற பெண்கள் குடும்பத்தை தலைமை ஏற்று செயல்படும் பட்சத்தில் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ், ஒரு கிராமத்துக்கு 50 கறவை மாடுகளும், 30 ஆடுகளும் வழங்கப்படும். ஒரு மாடு வாங்க, 30 ஆயிரம் ரூபாயும், ஆடு ஒன்றுக்கு 2,500 ரூபாயும் செலவிடப்படும். இத்தொகையில் ஏதேனும் மிச்சம் ஏற்பட்டால், அத்தொகை சம்பந்தப்பட்ட பயனாளிகளுக்கு அளிக்கப்படும்.மேலும், ஆட்டு கொட்டகை அமைக்க, 500 ரூபாய் வழங்கப்படும். கறவை மாடுகள் ஆந்திர மாநிலத்திலும், ஆடுகள் தமிழகத்திலும் கொள்முதல் செய்யப்படும்' என்றார்.

- பி.முரளிதரன்

---

## தண்ணீர் வரத்து இன்றி விவசாயிகள் கலக்கம்

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 19,2011,03:05 IST

கிள்ளை:தண்ணீர் வரத்து இல்லாததால் விவசாயம் செய்ய முடியாமல் கிள்ளை பகுதி விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர்.மேட்டூரில் இருந்து வரும் காவிரி தண்ணீரை நம்பி சிதம்பரம் பகுதியில் கடைமடைப் பகுதியில் ஆண்டு தோறும் விவசாயிகள் விவசாயம் செய்து வருகின்றனர். உரிய நேரத்தில் தண்ணீர் இல்லாததால் சம்பா சாகுபடிக்கு காலம் கடந்து

நடவு செய்து நவம்பர் மாதம் ஏற்படும் புயல் மழையில் சிக்கி பாதிக்கப்பட்டு வருவதும், அரசு இழப்பீடு வழங்குவதும் வாடிக்கையாக உள்ளது.
தற்போது சிதம்பரம் கிழக்குப் பகுதியில் போதுமான தண்ணீர் வரத்து இல்லாமலும், பருவமழை துவங்காததாலும், கான்சாகிப் வாய்க்கால் மூலம் வரும் தண்ணீரை நம்பியுள்ள 9,400 ஏக்கர், பாசிமுத்தான் ஓடை பாசனம் பெறும் 3,900 ஏக்கர் என 13 ஆயிரத்து 300 ஏக்கரில் விவசாயம் செய்ய பணிகளை துவங்காமல் விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர்.பாசிமுத்தான் ஓடை கீழ மூங்கிலடி மதகு வழியாக விவசாயம் செய்யும் கிள்ளை ரயிலடி, கீழ் அனுவம்பட்டு, கோவிலாம்பூண்டி உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட கிராம விவசாயிகள், கான் சாகிப்வாய்க்காலில் வரும் தண்ணீர் மூலம் விவசாயம் செய்யும் நக்கரவந்தன்குடி, பின்னத்தூர், நஞ்சைமகத்துவாழ்க்கை, கிள்ளை உள்ளிட்ட சுற்றுப்பகுதி விவசாயிகள் வாய்க்காலில் தண்ணீர் இல்லாததால் எந்த பணியும் துவங்காமல் உள்ளனர். இதனால் சிலர் கடந்த சில ஆண்டுகளாக விளை நிலங்களை வீட்டு மனைகளாக மாற்றியுள்ளனர். பாசன வாய்க்கால்களில் தண்ணீர் இல்லாமல் காலம் கடந்து நடவு செய்து பாதிக்கப்படுவோமோ என்ற அச்சத்தில் உள்ளனர்.
ஆனால் பொதுப்பணித் துறை அதிகாரிகள் இது குறித்து கண்டு கொள்ளாமல் உள்ளனர். எனவே விவசாயத்திற்கு போது மான வகையில் தண்ணீர் திறந்து விட மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர்.

---

**நடப்பு நிதியாண்டில் காபி உற்பத்தி 6.7 சதவீதம் அதிகரிக்கும்**

ஆகஸ்ட் 19,2011,00:31



புதுடில்லி: நடப்பு 2011-12ம் நிதியாண்டில், காபி உற்பத்தி 6.7 சதவீதம் வளர்ச்சி காணும் என மதிப்பிடப்பட்டுள்ளது. காபி பருவ முன்மதிப்பீட்டில், கடந்த 2010-11ம் நிதியாண்டை விட, நடப்பு 2011-12ம் நிதியாண்டில் காபி உற்பத்தி 6.7 சதவீதம் அதிகரிக்கும் என, இந்திய காபி வாரியம் மதிப்பிட்டுள்ளதாக, வர்த்தகம் மற்றும் தொழில்துறை இணையமைச்சர் ஜோதிர் ஆதித்ய சிந்தியா, ராஜ்ய சபாவில் தெரிவித்தார்.மதிப்பீட்டின்படி, நாட்டின் மொத்த காபி உற்பத்தி, நடப்பு நிதியாண்டில், 3 லட்சத்து 22 ஆயிரத்து 250 டன்னாக இருக்கும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது, கடந்த நிதியாண்டில், 3 லட்சத்து 2 ஆயிரம் டன்னாக இருந்தது.கடந்த 2010-11ம் நிதியாண்டில், கர்நாடகாவின் காபி உற்பத்தி, 2 லட்சத்து 13 ஆயிரத்து 780 டன்னாகவும், கேரளாவின் காபி உற்பத்தி 65 ஆயிரத்து 650 டன்னாகவும் இருந்தது. சென்ற நிதியாண்டில் தமிழ்நாடு, 16 ஆயிரத்து 650 டன் காபியை உற்பத்தி செய்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.இதே காலத்தில், பட்ஜெட் மதிப்பீட்டை விட மறைமுகவரி வசூல் சிறப்பாக இருந்தது. சுங்க வரி 37.7 சதவீதமும், உற்பத்தி வரி 232 சதவீதமும்,÷வைகள் வரி 311 தவீதமும் வளர்ச்சி கண்டுள்ளன. இது, பட்ஜெட்டில், முறை@ய 15.1 தவீதம், 192 சதவீதம் மற்றும் 182 சதவீதமாக மதிப்பிடப்பட்டிருந்தது.

---

## திருச்சிக்கு காய்கறி வரத்து பாதிக்கும் அபாயம்:லாரி ஸ்டிரைக்; ரூ.20 கோடி வர்த்தகம் பாதிப்பு?

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 19,2011,00:38 IST

திருச்சி: பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி துவங்கியுள்ள லாரி ஸ்டிரைக்கால் திருச்சி காந்திமார்க்கெட் வரவேண்டிய காய்கறிகள் இன்று முதல் வரமுடியாது என்பதால், காய்கறிக்கு தட்டுப்பாடும், விலையேற்றமும் ஏற்படம் சூழல் உருவாகியுள்ளது. தென்னிந்திய லாரி உரிமையாளர் சங்கத்தினர் சுங்கச்சாவடிகளில் அதிக கட்டணம் வசூல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, நேற்று இரவு முதல்

ஸ்டிரைக்கில் குதித்துள்ளனர். இதனால் நேற்று காலை முதல் லாரிகள் ஓடவில்லை. திருச்சி மாவட்டத்திலிருந்து தினமும் 3,000 லாரிகள் இயக்கப்பட்டு வருகிறது. ஸ்டிரைக்கால் நேற்று முன்தினம் முதலே திருச்சியின் பல இடங்களில் லாரிகள் நிறுத்தப்பட்டது. நேற்று காலை முதல் அனைத்து லாரிகளும் ஆங்காங்கே நிறுத்தப்பட்டது. திருச்சிக்கு வெளியூர்களிலிருந்தும், வெளிமாநிலங்களிலிருந்தும் நாள்தோறும் 300 லாரிகளில் மளிகைப் பொருட்களும், 100க்கும் மேற்பட்ட லாரிகளில் காய்கறிகளும் கொண்டு வரப்படும். நேற்று அதிகாலை பெரும்பாலான லாரிகள் சரக்குகளுடன் காந்திமார்க்கெட்டுக்கு வந்தது. அதன்பின் ஸ்டிரைக்கில் பங்கேற்பதால் லாரிகள் போக்குவரத்து அப்படியே நிறுத்தப்பட்டது. இதனால் இன்று காலை திருச்சி காந்திமார்க்கெட் வரவேண்டிய காய்கறிகள், மளிகைப் பொருட்கள் ஆகியவை, வரமுடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. இதனால் திருச்சியில் காய்கறி மற்றும் மளிகைப் பொருட்களுக்கு தட்டுப்பாடும், விலையேற்றமும் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இம்முறை கோரிக்கைகள் நிறைவேற்றும் வரை லாரி ஸ்டிரைக் நடக்கும் என்று உரிமையாளர்கள் திட்டவட்டமாக அறிவித்து விட்டால், ஸ்டிரைக் பல நாட்கள் நீடிக்கும் என்றே தெரிகிறது. ஆகையால், அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது. ஸ்டிரைக்கால் வெளிமாநிலங்களிலிருந்தும், வெளிமாவட்டங்களிலிருந்தும் நேற்றும், இன்று அதிகாலையும் திருச்சி வந்த லாரிகள் அனைத்தும் பல இடங்களில் நிறுத்தப்பட்டுள்ளது. அந்த லாரிகளின் டிரைவர்கள் லாரிகள் நிறுத்தப்பட்ட இடங்களிலேயே சமைத்து சாப்பிட்டு வருகின்றனர். திருச்சி காந்தி மார்க்கெட்டுக்கு வரும் லாரிகளின் சரக்கை இறக்கும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுமை தூக்கும் தொழிலாளர்கள் வேலையின்றி சிரமப்படும் சூழ்நிலையும், லாரிகள் ஸ்டிரைக்கால் உருவாகியுள்ளது. லாரிகள் ஸ்டிரைக்கால் ஒருநாளைக்கு 20 கோடி ரூபாய்க்கு மேல் வர்த்தகம் பாதிக்கப்படும் என்று கூறப்படுகிறது.""மக்களின் அத்தியாவசியமான குடிநீர் மற்றும் பால் வண்டிகள் மட்டும் வழக்கம்போல் ஓடும்," என்று ஸ்டிரைக்கில் ஈடுபட்டுள்ள லாரி உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

---

## இலவச ஆடு, மாடுகள் வழங்கும் திட்டம் கலந்தாய்வு கூட்டம்: கலெக்டர் பங்கேற்பு

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 18,2011,03:05 IST

தஞ்சாவூர்: தஞ்சாவூர் கலெக்டர் அலுவலகத்தில் கால்நடை பராமரிப்புத்துறை இயக்குனர் பழனிச்சாமி தலைமையில் கால்நடை துறை அலுவலர்களுடன் தமிழக அரசின் இலவச கறவை மாடுகள் வழங்கும் திட்டம், இலவச வெள்ளாடு, செம்மறியாடு வழங்கும் திட்டங்களுக்கான முன்னேற்பாடு பணிகள் மற்றும் திட்டப் பணிகளின் செயல்பாடுகள் பற்றிய கலந்தாய்வு கூட்டம் நடந்தது. கலெக்டர் பாஸ்கரன் முன்னிலை வகித்தார்.
கால்நடை பராமரிப்புத்துறை இயக்குனர் பழனிச்சாமி பேசியதாவது: முதல்வர் ஜெயலலிதா சிறப்பு திட்டங்களான இலவச கறவை மாடுகள் வழங்கும் திட்டம் மற்றும் இலவச ஆடுகள் வழங்கும் திட்டம் போன்ற திட்டங்களின் கீழ் பயன் பெற தகுதியுள்ள பயனாளிகளை தேர்வு செய்ய கால்நடைத்துறை அலுவலர்கள் மற்றும் மருத்துவர்கள் கலெக்டரின் வழிகாட்டுதலின் பேரில் பணியாற்ற வேண்டும்.
அனைத்து கால்நடை மருத்துவமனைகளிலும், குறித்த நேரத்தில் கால்நடை மருந்துவர்கள் மற்றும் கால்நடை ஆய்வாளர்கள் பொதுமக்களுக்காக பணியாற்ற வேண்டும். கால்நடைகள் மழை காலங்களில் இறப்பின் போது இறப்புச் சான்று வழங்குவதுக்கு ஏதுவாக கால்நடை மருத்துவர்கள் தகுந்த பணிகளை சுணக்கமின்றி ஆற்ற வேண்டும். இவ்வாறு கால்நடை பராமரிப்புத்துறை இயக்குனர் பழனிச்சாமி தெரிவித்தார்.
கலெக்டர் பாஸ்கரன் பேசியதாவது: கிராமங்களில் பால் உற்பத்தியாளர்கள் சங்கம் இல்லாத இடங்களில் புதிதாக பால் உற்பத்தியாளர் சங்கங்களை ஏற்படுத்த பொதுமக்களோடு கால்நடை மருத்துவர்கள், அலுவலர்கள் இணைந்து பணியாற்ற வேண்டும். இயற்கை சீற்றங்களின் போது கால்நடைத்துறை அலுவலர்கள், மருத்துவர்களோடு முன்னேற்பாடு பணிகள் மேற்கொள்ளுவதுக்கான கூட்டங்கள் நடத்தப்படும் என்றார்.
கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் டாக்டர்

அருள்மணி, மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) முகமது ஆரிப்சாகிப் உட்பட பலர் பங்கேற்றனர்.

---

### திருந்திய நெல் சாகுபடி பயிற்சி

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 18,2011,01:50 IST

திருத்துறைப்பூண்டி: திருத்துறைப்பூண்டி வேளாண்மை வட்டாரத்தில் திருந்திய நெல் சாகுபடி விவசாயிகளுக்கு நெடும்பலம் அரசு விதைப்பண்ணையில் வேளாண் உதவி இயக்குனர் நடேசன் தலைமையில் திருந்திய நெல் சாகுபடி பயிற்சி நடந்தது.
2011 - 2012ம் ஆண்டுக்கு கச்சனம், திருவலஞ்சுழி, வேளூர், சிங்களாந்தி, கட்டிமேடி, கீரைகலூர் ஆகிய கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியின் போது ""குறைந்த விதையளவு, அதாவது இரண்டு கிலோ அல்லது மூன்று கிலோ விதையை பயன்படுத்தி ஒரு ஏக்கர் நிலம் நடவு செய்யலாம் எனவும், பச்சை நாற்று கொண்டு நடவு செய்து பத்து நாட்களுக்கு ஒரு முறை கோனோ விடர் கருவியை கொண்டு களை மிதிக்கப்படுவதால் நாற்றின் வேர்கள் தூண்டப்பட்டு அதிக தூர்கள் உற்பத்தியாவதால், குறைந்தது 60 தூர்கள் முதல் அதிபட்சம் 110 தூர்கள் வரை வளர்வதால் சராசரி மகசூலை விட அதிகபட்சம் இரண்டு மடங்கு வரை உற்பத்தி திறன் கூடுகிறது.
விதை, நாற்றங்கால் அமைத்தால், நடவு ஆகிய சாகுபடி பணியில் கணிசமான செலவினம் குறைகிறது. விளை வண்ண அட்டையை பயன்படுத்தி உரம் இடுவதால் தேவையான நேரத்தில் தேவையான உரம் அளவோடு பயன்படுத்தி வருவதால் செலவு குறைகிறது. மற்றும் சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்து," வேளாண்மை அலுவலர் தெய்வேந்திரன், துணை அலுவலர் தவமணி ஆகியோர் விளக்கமளித்தனர். நெல் சாகுபடி குறித்து பண்ணை மேலாளர் சங்கர் நேரடி விளக்கமும், பயிற்சியும் அளித்தார். இதில், 100 விவசாயிகள் பங்கேற்று பயிற்சி பெற்றனர். தேசிய உணவு பாதுகாப்பு திட்ட தொழில் நுட்ப உதவியாளர் வேதநாயகி நன்றி கூறினார்.

---

தினகரன்

## உணவு பொருள், ஆடைகள் விலை அதிகரிப்பு

பதிவு செய்த நாள் : 8/19/2011 0:47:55



புதுடெல்லி : உணவு பொருள்கள், ஆடைகள் உட்பட சில பொருள்களின் விலையை நிர்ணயம் செய்வதற்காக இந்த ஆண்டின் தொடக்கத்தில் நாடு தழுவிய நுகர்வோர் விலை குறியீட்டெண் அறிமுகம் செய்யப்பட்டது. அதன்படி பொருட்களின் விலையை அரசு வெளியிட்டு வருகிறது. ஜூலையில் பொருள்களின் விலை 1.47 சதவீதம் அதிகரித்து 110.4 புள்ளிகளானது. ஜூன் மாதத்துடன் ஒப்பிடுகையில் ஜூலை மாதத்தில் உணவு, தேநீர், புகையிலைகளின் விலை 1.57 சதவீதம¢ அதிகரித்து 110.3 புள்ளியானது. காய்கறிகள் 8.62 சதவீதம் அதிகரித்து 108.4 புள்ளியாகவும், பால் மற்றும் பால் பொருள்கள் 1.15 சதவீதம் அதிகரித்து 114.6 புள்ளியானது.

முட்டை, கறி, மீன்களின் விலை 1.07 சதவீதம் அதிகரித்து 113.5 புள்ளியானது. எண்ணெய் பெட்டி 1.20 சதவீதம் அதிகரித்து 118 புள்ளியானது. வெற்றிலை, புகையிலை, போதை பொருள்கள் விலை 1.37 சதவீதமும், பழங்கள் 0.62 சதவீதமும் அதிகரித்தன. மே மாதம் டீசல், சமையல் காஸ், மண்ணெண்ணெய் விலையை அரசு உயர்த்தியதால், ஆடைகள்,

விரிப்புகள், காலணிகள் விலை 1.13 சதவீதம் அதிகரித்தது. மேலும் நகரங்களில் வீட்டு வாடகை 0.66 சதவீதமும், கிராம புறங்களில் 0.83 சதவீதமும் அதிகரித்தது.
உணவு பணவீக்கம்: கடந்த 6ம் தேதியுடன் முடிந்த வாரத்தில் உணவு பணவீக்கம் 9.03 சதவீதமாக சரிந்தது. முந்தைய வாரத்தில் இரு 9.9 சதவீதமாக இருந்தது.

---